**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.124/2016** **Date:19.09.2023**
**(P.W– 2)**

திரு.சண்முகசுந்தரம் த/பெ.சின்னதம்பி கவுண்டர்
**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. வாதி கணேசன் அழைதததின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால், சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு கணேசன் சொல்லிதான் தெரியும் என்றால், சரியல்ல. நேரடியாக தெரியும். நான் கோயமுத்தூரில், தம்பாகவுண்டன் பாளையத்தில் குடியிருக்கிறேன். வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால், பிரதிவாதிகள் இடத்தை காலிசெய்ய வேண்டி வழக்கு போட்டுள்ளார். நான் இந்த வழக்கு ஆவணங்களை பார்த்துள்ளேன். வருவாய் துறை பட்டாவை பார்த்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. என் முதல் விசாரணையில் 2ம் பத்தியில் சொல்லியுள்ளது போல் முத்துசாமி கவுண்டரின் மகளின் மகன் என்று வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல.

2. நான் முத்துசாமி கவுண்டரின் பேரன் என்று சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் முத்துசாமி கவுண்டரின் பேரனாக இருந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் வழக்கிற்க்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல நான் விவசாயம் செய்கிறேன். என் பூர்வீகம் தம்பாகவுண்டன் பாளையம் என்றால், சரிதான். நான் விவசாயம் செய்து வருவது கோயமுத்தூரில் உள்ள என் பூர்வீக பூமி என்றால், சரிதான். நான் கோயமுத்தூரில் தான் படித்தேன். நான் பெருமாநல்லூரில் ஒரு காலத்திலும் குடியில்லை என்றால், 1988 லிருந்து 10 வருடம் குடியிருந்தேன். நான் பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்றாதாக சொல்வது வழக்கிற்க்காக என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சுப்பிரமணியன், முத்துசாமி கவுண்டர் சொல்கின்ற வேலைகள் எல்லாம் செய்து வந்தார் என்று சொல்வது தவறு என்றால், சரியல்ல.

3. தாவா சொத்தின் காலை எண் என்ன என்றால், 274/ பி1, ஏ 1, ஏ 1 ஏ ஆகியவை

ஆகும். தற்போது தாவா சொத்து நத்தம் சொத்து என்றால், தெரியாது. தற்போதைய உட்பிரிவு தெரியாது என்றால், சரிதான். காலை 274 என்பது நத்தத்திற்கு முன்பாக இருந்து பழைய காலை எண் என்றால், சரிதான். தற்போது காலை 353 ல் உள்ளது என்றால், தெரியாது. தாவா சொத்தின் இயற்கை அமைப்பு எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் சொல்வது போல ஒருகாலத்திலும் சுப்பிரமணியத்திற்கு முத்துசாமி கவுண்டர் எந்த அனுமதியும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. அனுமதியின் பெயரில் சொத்தை அனுபவித்து வருவதாக சொல்வது வழக்கிற்க்காக என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் காலை 353/2 ல் அவர்கள் முழு உரிமையாளர்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. அவர்கள் தான் அந்த இடத்தில் உள்ளார்கள் என்றால், சரிதான்.

4. காலை 353/2 காலை பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்றும் அதில் வாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்றால், சரியல்ல. நான் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் சாட்சியம் ஏற்க தக்கது அல்ல என்றால், சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.09.19 19:55:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.